வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 28.08.2025 வியாழக்கிழமை இதழ் : 240 பக்கங்கள் : 12

# காணி விடுவிப்பு குறித்து தீர்மானிக்க அமைச்சுக்கள் மட்டக் குழு விரைவில்!

## அமைச்சர் விஜித ஹேரத் நேற்று தகவல்



கொழும்பு, ஓகஸ்ட் 28

**காணி விடுவிப்பு தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு அமைச்சுகள் மட்ட குழுவொன்றை ஸ்தாபிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனை குறிப்பிட்டார்.

இதனூடாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை, அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் விவசாய நடவடிக்கைக்கான காணிகளை வழங்குவதற்கும் சில பகுதிகளில் குடியேற்றத்துக்கான காணிகளை விடுவிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

இதற்காக வனஜீவராசிகள் மற்றும் வனவள திணைக்களம், மகாவலி அதிகார சபை உள்ளிட்ட பல நிறுவனங்களுடன் கலந்துரையாடி, நிரந்தர குடியிருப்பு அமைத்தல், வர்த்தகம் மற்றும் விவசாயம் போன்ற நடவடிக்கைகளுக்கு காணிகளை வழங்கும் நோக்கில் இந்த அமைச்சுக்களுக்கு இடையிலான குழுவொன்றை நியமிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (அ)

# கச்சதீவை ஒருபோதுமே விட்டுக்கொடுக்கமுடியாது

## விஜயின் கருத்துக்கு விஜித ஹேரத் பதிலடி

கொழும்பு, ஓக. 28

கச்சதீவை ஒருபோதும் இந்தியாவுக்கு விட்டுக் கொடுக்கமாட்டோம் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் இதனை கூறினார்.

"கச்சதீவை மீட்டு தமிழக கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு பிரதமர் மோடி தீர்வை வழங்க வேண்டும்" என, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர், நடிகர் விஜய் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் 11

# மாணவர் இருவர் விபத்தில் மரணம்

*13 மாணவர்கள் காயம்*

கொழும்பு, ஓக. 28

குளியாப்பிட்டி - வில்பொல பாலத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பாடசாலை மாணவர்கள் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

குளியாப்பிட்டி - தும்மலசூரிய - நிலபொல பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்றும் டிப்பர் ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டதில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. விபத்தில், பாடசாலை மாணவர்கள் உட்பட மூவர் உயிரிழந்தனர். அத்துடன், காயமடைந்த 13 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# செம்மணி மனிதப் புதைகுழியை ஜனாதிபதி அநுர பார்வையிடுவார்

யாழ்ப்பாணம், ஓக. 28

செம்மணி மனிதப் புதைகுழியை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பார்வையிடலாம் என கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இதனை கூறினார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் 11

# இந்த வருடத்தில் வாகன விபத்தில் 1,778 பேர் பலி!

கொழும்பு, ஓக. 28

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் நேற்று வரை மரணங்களை ஏற்படுத்திய 1,682 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் 11

# மேலும் 3 மனித எலும்புக்கூடுகள் செம்மணி மனிதப் புதைகுழியில்

யாழ்ப்பாணம், ஓக. 28

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று புதன்கிழமை மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அகழ்வாய்வுத் தளங்களை மேலும் விஸ்தரிக்கும் நடவடிக்கைகளின் போது புதிதாக 16 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டு இருந்த நிலையில் நேற்று புதன்கிழமை மேலும் 03 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேவேளை நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்ட 11

# அரசியல் பழிவாங்கல்களை கையாள்வதற்காக சட்ட குழு

கொழும்பு, ஓக. 28

அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கல்களை கையாள்வதற்காக ஒரு சட்டக் குழுவை நியமிக்க முடிவு செய்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று எதிர்க்கட்சிகள் கூடி இந்த முடிவை எடுத்துள்ளன. இந்தக் குழுவை ஒருங்கிணைக்கும் தலைமை பொறுப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடியிடம் வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான லசந்த அழகியவண்ண மற்றும் சமன் ரத்னபிரிய ஆகியோர் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# உ.கிழங்கு, வெங்காயத்துக்கு விசேட பண்ட வரி அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 28

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் மீதான விசேட பண்ட வரியை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த வரி திருத்தம் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இது தொடர்பான வர்த்தமானி 11

# அரசாங்கம் சரியில்லை என்றால் ஐந்து ஆண்டுகளில் விரட்டுங்கள்

## பிரதி அமைச்சர் சரத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 28

அரசாங்கம் சரியில்லை என்றால் ஐந்து ஆண்டுகளில் தங்களை விரட்டுமாறு வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி. சரத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தற்போதைய தேசிய மக்கள் சக்தி 11

# இ.போ.ச. யாழ். சாலைக்கு 2 குளிரூட்டப்பட்ட பஸ்கள்

யாழ்ப்பாணம், ஓக. 28

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாணம் சாலைக்கு இரண்டு குளிரூட்டப்பட்ட பஸ்கள் மீள் பயன்பாட்டுக்கு திருத்தப்பட்டு கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் குறித்த இரண்டு பஸ்களும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்ட விருந்தினர்களால் நாடா வெட்டி மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டன.

அண்மையில் இலங்கை போக்குவரத்துச் சபை களஞ்சியத்தால் பழுது பார்க்கப்பட்ட இரண்டு குளிரூட்டப்பட்ட பஸ்களே யாழ்ப்பாணம் - 11

# ரணிலை பார்க்க சென்றதை ஆதாரத்துடன் நிரூபியுங்கள்

## சவால் விடுகிறார் பிரதமர் ஹரிணி

கொழும்பு, ஓக. 28

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவை தாம் நேரில் சென்று சுக நலன் விசாரித்ததாக கூறுவதை ஆதாரபூர்வமாக நிரூபிக்குமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் 11

# வைத்தியர் ருக்ஷான்மீது ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, ஓக. 28

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை தொடர்பாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்த நிலையில் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார். 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நிர்வாக அமைச்சர் கிளிநொச்சிக்கு விஜயம்!

கிளிநொச்சி, ஓக. 28

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ. எச். எம். எச். அபேரத்ன மற்றும் அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டார உள்ளிட்ட குழுவினர் நேற்று முன் தினம் மாலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்தனர்.

இதன்போது, மாவட்ட செயலகத்தின் செயல்பாடுகளை பார்வையிட்ட குறித்த குழுவினர், மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ், காணிக்கான மேலதிக அரசாங்க அதிபர் அஜிதா பிரதீபன, 4 பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டனர். (அ)

# மாதிரி கிராமமாக தெரிவு செய்யப்பட்ட தேறாங்கண்டலுக்கு அதிகாரிகள் விஜயம்

முல்லைத்தீவு, ஓக. 28

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலக அதிகாரிகள், துணுக்காய் பிரதேச செயலகம் தேறாங்கண்டல் பிரிவில் வசிக்கும் மக்களின் பிரச்னைகளை வீடு வீடாக சென்று ஆராய்வதற்கான களவிஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் ராமதாஸ் ரமேஸின் வழிகாட்டுதலின் கீழ் நகமா மற்றும் ஒளிரும் வாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் துணுக்காய் உதவி பிரதேச செயலாளர் சிறீஜெயராம் நித்தியா தலைமையிலான குழுவினர் மக்களின் பிரச்னைகளை ஆராய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் சிறீஜெயராம் நித்தியாவின் பங்குபற்றுதலுடன், தேறாங்கண்டல் கிராம சேவகர் பிரிவில் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு அங்குள்ள மக்களின் அடிப்படை பிரச்னைகள் பற்றியும் தீர்க்கப்படாத குறைபாடுகள் பற்றியும் அவற்றை செயல்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டறியப்பட்டது. இவற்றைத் தொடர்ந்து தெளிவூட்டல் மற்றும் விழிப்புணர்வு வேலைத் திட்டங்களும் உத்தியோகத்தர்களால் மேற் கொள்ளப்பட்டது.

குறித்த கள விஜயத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 60இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இக்கிராமம் ஆளுநரின் செயல்திட்டத்தில் மாதிரிக் கிராமமாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மருந்துகளுக்கான விலைகள் குறித்தல் பொறிமுறைக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக. 28

2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் மருந்துகளுக்கான விலை குறித்தல் பொறிமுறைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக பதில் அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குறித்ததொரு மருந்து அல்லது மருந்து வகை மற்றும் இனம் என்பவற்றுக்கான அதிகபட்ச உச்சவரம்பு விலைக்கான விலை குறித்தல் பொறிமுறையை அறிமுகப்படுத்தி 2015ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மருந்து (மருந்துகளுக்கான விலை குறித்தல் பொறிமுறை) ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த ஒழுங்குவிதிகள் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய, குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# சந்தேகநபர் தப்பியதால் பொலிஸ் அதிகாரி இடைநீக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சந்தேக நபர் ஒருவர் தப்பியோடிய நிலையில், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில், கடந்த 25 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சந்தேக நபர், சுகவீனமடைந்த நிலையில், பொலிஸ் பாதுகாப்புடன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இதன் போது, சந்தேக நபர் வைத்தியசாலையில் இருந்து தப்பியோடியுள்ளார்.

இதையடுத்து, பொலிஸார், மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்து, நீதிமன்றத்தினால் சந்தேக நபருக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், பொலிஸாரின் உள்ளக விசாரணைகளை அடுத்து, சந்தேக நபர் தப்பிச் சென்றவேளை, சந்தேக நபருக்கான பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் தர உத்தியோகத்தர் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# இலஞ்சம் வாங்கிய அதிகாரிகள் கைது

கொழும்பு, ஓக. 28

விவசாயி ஒருவரிடம் 3 இலட்சம் ரூபாய் இலஞ்சம் வாங்கிய விவசாய அதிகாரிகள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

விவசாய சேவைகள் மையத்தின் மேம்பாட்டு அதிகாரி, உற்பத்தி அதிகாரி ஆகியோரே இவ்வாறு இலஞ்ச ஒழிப்பு ஆணையகத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜா-எலவை சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில், கடந்த 15ஆம் திகதி விவசாய சேவைகள் மைய அலுவலகத்தில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

நபர் ஒருவருக்குச் சொந்தமான ஒரு வயலை நெல் அல்லாத நிலமாக பெயரிட உறுதிப்படுத்தும் கடிதத்தை வழங்கவே அவர்கள் இலஞ்சம் பெற்றுள்ளனர். (அ)

# பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகள்

கிளிநொச்சி, ஓக. 28

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில், கல்வி பொதுத் தராதர உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகளின் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

சுமார் 450இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வரும் பாடசாலையில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஏற்படுத்தித் தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, கல்வி அமைச்சினால் கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன், கிளிநொச்சி வடக்கு வலய கல்வி பணிப்பாளர் க. அ. சிவனருள் ராஜா மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலர் பங்கேற்றனர். (அ)

# நல்லிணக்கம் மற்றும் சமூக நீதிக்கான செயல்பாடுகள் குறித்து யாழில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக. 28

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் உள்வாங்குதல், நல்லிணக்கம் மற்றும் சமூக நீதிக்கான பன்முக செயல்பாடுகள் திட்டம் யாழில் சொண்ட் நிறுவனத்தின் ஊடாக யாழ். சர்வ மதக் குழு உடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழான கூட்டம் மஸ்ஜிதுல் முகமதியா பள்ளியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். மாவட்ட சர்வ மதக் குழுவின் இணைப்பாளர் ஜென்சியின் வழிப்படுத்தலில் இடம்பெற்ற கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள இன, மத நல்லிணக்கத்தை பாதிக்கும் காரணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மத குருமார்கள், அரசு பணியாளர்கள் மற்றும் சமூக செயல்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

### தனியார் மயமாக்கலை எதிர்த்து

# மின்சார சபை ஊழியர்கள் சத்தியாக்கிரக போராட்டம்

கொழும்பு, ஓக. 28

கடந்த அரசாங்கம் கொண்டு வரவிருந்த இலங்கை மின்சார சபை தனியார்மயப்படுத்தல் நடவடிக்கைகளை ஆட்சியை கைப்பற்றி 4 மாதங்களிலேயே கைவிட நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த அரசாங்கம், தற்போது அதனையே நடைமுறைப்படுத்தியுள்ளதாக இலங்கை மின்சார சபையின் புதிய சேவையாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

புதிய மின்சாரச் சட்ட விதிகளின் கீழ் இலங்கை மின்சார சபை நெசனல் சிஸ்டம் ஒபரேடர் பிரைவட் லிமிடட், நசனல் ட்ரான்ஸ்மிசன் நெட்வேர்க் சேர்விஸ் புரவைடர் பிரைவட் லிமிடட், எலக்ரிசிட்டி டிஸ்ரிபுயுசன் லங்கா பிரைவட் லிமிடட், எலெக்ரிசிற்றி ஜெனரேஷன் லங்கா பிரைவட் லிமிடட் என தனித்தனி நிறுவனங்களாக மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை மின்சார சபையின் தற்போதைய ஊழியர்கள் தங்கள் விருப்பப்படி 4 நிறுவனங்களில் ஒன்றுக்கு மாறுவதற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும் என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த செயல்முறைக்கு நேற்று முதல் இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அனைத்து ஊழியர்களுக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் அரசின் உரிமையின் கீழ் இருக்கும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய நிறுவனங்களில் உள்வாங்க விரும்பாத ஊழியர்களுக்கு இழப்பீட்டு திட்டத்தின் கீழ் ஓய்வு வழங்கப்படும் என வலுசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு - கோட்டை பகுதியிலுள்ள பிரதான அலுவலகத்திற்கு முன்பாக சத்தியாகிரகக் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய புதிய சேவையாளர் சங்கத்தின் பிரதான செயலாளர் பிரியந்த விக்ரமசிங்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கடந்த அரசாங்கம் கொண்டு வந்த மின் சட்டத்தை இரத்து செய்து, மக்களுக்கும் ஊழியர்களுக்கும் சாதகமாக ஒரு சட்டத்தை கொண்டு வருவதாகவே இந்த அரசாங்கம் வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்தது.

ஆனால், அதே சட்டத்தை தற்போது, திருத்தம் செய்து மோசமான முறையில் சர்வதேச நிறுவனங்களிடம் ஒப்படைக்கிறார்கள்.

மின்சார சபை என்பது ஒரு சேவை வழங்கும் நிறுவனம்.

இந்த புதிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்ட பிறகு அந்தந்த நிறுவனங்களில் இருக்கும் பணிப்பாளர்கள் சுயாதீன அதிகாரங்களைப் பெறுவார்கள்.

அவர்களே அந்த நிறுவனத்தின் எதிர்கால செயல்பாடுகளை தீர்மானிக்க போகின்றார்கள்.

அவர்கள் சேவை மனப்பாங்கை விட்டு விலகி, இலாபத்திற்காக மட்டுமே இயங்க முயற்சிப்பார்கள்.

எனவே, நாங்கள் இதற்கு தெளிவாக எதிர்ப்பு தெரிவிக்கிறோம்-என்றார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம்!




வவுனியா, ஓக. 28

வடக்கு கிழக்கு தமிழர் தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் தாய்மார்கள், 3 ஆயிரத்து 111 ஆவது நாளான நேற்று, ஊர்வலத்தை முன்னெடுத்தனர்.

வவுனியா கந்தசுவாமி கோவிலில் தேங்காய் உடைத்து ஆரம்பமான ஊர்வலம், மணிக்கூட்டுச் சந்தி வழியாக, ஏ-9 வீதியை அடைந்து, தொடர் போராட்ட கொட்டகையை அடைந்தது. அங்கு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.08.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பேசவேண்டிய முக்கிய அரசியல் விவகாரம்

"மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு நிச்சயிக்கப்பட்ட சட்டம் ஒன்று நாட்டில் இல்லை", என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்திருக்கிறார். "தேர்தலை விரைவாக நடத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்", என்று குறிப்பிட்டிருக்கும் அவர் ஜனநாயக முறைமைக்கு அமைவாகத் தேர்தலை நடத்துவதற்கு தாம் தயாராக இருக்கிறோம் என்றும் தெரிவித்திருக்கிறார். இங்கு ஒரு முக்கியமான விடயத்தைத் தமிழர் தரப்புகள் கவனிக்க வேண்டும்.

போகமுடியாத ஊருக்கு வழி சொல்லிக் கொண்டிருப்பது மிகவும் இலகுவானது. அதற்கு அரசியல் அறிவும் வேண்டியதில்லை. சாதாரணமாக ஒரு தேநீர் கடையில் இருந்து அவற்றைப் பேசிவிட்டுச் செல்லலாம். ஆனால், நடைபெறக்கூடிய விடயங்கள் திட்டமிட்டுத் தாமதப் படுத்தப்படும்போது அது தொடர்பில் அனைத்துத் தமிழ் கட்சிகளும் கூட்டு நிலைப்பாடு ஒன்றை எடுக்கமுடியும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் மாகாண சபைகள் தேர்தல் விவகாரத்தை ஒரு ஜனநாயக கோரிக்கையாக முன்னிறுத்த வேண்டியதுதான் இன்றுள்ள அவசரமான - அவசியமான- சாத்தியமான விடயமாகும். ஆனால், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளோ இல்லாத ஊரை வர்ணிப்பதிலேயே தங்களின் ஆற்றலை - நேரத்தை விரயம் செய்துகொண்டிருக்கின்றன.

தேர்தல் ஆணையாளர், "ஜனநாயக முறைமைக்கு அமைவாகத் தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் தாயராக இருக்கிறோம். ஆனால்,, அதற்கான கதவை பாராளுமன்றமே திறக்கவேண்டும்", என்று கூறுவது மிகவும் முக்கியமான விடயம். தற்போதுள்ள சூழலில் பாராளுமன்ற பெரும்பான்மை யாரிடம் உள்ளது? அவ்வாறாயின், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு யாரிடம் உண்டு? ஒருவேளை பல கட்சிகளின் ஆதரவுடன் உள்ள பாராளுமன்றம் என்றால் பலருக்கு பொறுப்பிருக்கும். அதேவேளை பாராளுமன்றத்தைக் கையாள்வதும் சிக்கலான விடயம். ஆனால், இப்போது நிலைமையோ தலைகீழாக இருக்கிறது. ஜனநயாகத்தை நிலைநாட்டும் முழுப்பொறுப்பும் ஒரு கட்சியிடம் இருக்கிறது. இந்தநிலையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் மட்டுமே இருக்கிறது.

எதிர்க்கட்சிகளும் மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி வருகின்றன. இந்தநிலையில், அதனைக் கையிலெடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பும் உரித்தும் தமிழ் கட்சிகளுக்கே உண்டு. ஆனால், இது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் பேசவில்லை. குறிப்பாக, தாங்களே வடக்கு - கிழக்கின் பிரதான தமிழ் கட்சியென்று கூறும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இது தொடர்பில் பேசவில்லை. வெறுமனே பாராளுமன்றத்தில் ஒரு தனிநபர் பிரேரணையை கொண்டுவருவதுடன் விடயம் முடிந்து விடவில்லை. அனைத்து கட்சிகளும் இந்தப் புள்ளியில் இணையவேண்டும். ஈழநாடு ஏற்கனவே இது தொடர்பில் சில விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தது. அனைத்துத் தமிழ் கட்சிகளுக்கான ஒரு மகாநாட்டை பரிந்துரைத்திருந்தது. ஆனால் இன்றுவரையில் தமிழ்க் கட்சிகள் அதுபற்றி சிந்தித்தனவாகத் தெரியவில்லை.

# அரசாங்கம் தேசிய நல்லிணக்க திட்டத்தை மக்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும்

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் செப்ரெம்பரில் 51/2 தீர்மானத்தின் கீழ் முன்னிலையாவதற்கு தயாராகிக்கொண்டிருக்கும் நிலையில், வெறுமனே வாக்குறுதிகளை விடவும் கூடுதலாக காண்பிக்க வேண்டிய தேவை இருக்கிறது. புதிய அரசாங்கம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பம் ஒன்றையும் பயன்விளைவுகளை காண்பிக்கக்கூடிய தெளிவான ஆணை ஒன்றையும் கொண்டிருக்கிறது என்பதையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் 2025 அறிக்கை அங்கீகரித்திருக்கிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அடாத்தான கைதுகள், பொலிஸ் காவலில் மரணங்கள், சிவில் சமூகம் மீதான அச்சுறுத்தல் தொடர்வதையும் செம்மணி போன்ற மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவதையும் ஐக்கிய நாடுகள் அறிக்கை பிரத்தியேகமாக சுட்டிக்காட்டியிருக்கிறது. இது அவசரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தி நிற்கிறது.

நீதியமைச்சின் கீழ் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படவிருக்கும் புதிய தேசியக் கொள்கை ஒன்றையும் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பிலான செயற்திட்டம் ஒன்றையும் வகுப்பதற்கு அமைச்சரவை இந்த மாத முற்பகுதியில் அங்கீகாரம் அளித்தது.

நம்பகமான ஒரு திட்டம் பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்தல், மனிதப் புதைகுழி தொடர்பிலான விசாரணைகளை பூர்த்தி செய்தல், சர்வதேச பங்கேற்புடன் சுயாதீனமான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நிறுவுதல், போர் மற்றும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்படைய வகை மாதிரியான வழக்குகளை (Emblematic cases) முன்னெடுப்பதற்கு வழக்குத் தொடுக்கும் அமைப்பு ஒன்றை அமைத்தல் ஆகியவை தொடர்பில் தெளிவான காலக்கெடுக்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடிமக்கள் வாழ்வில் இராணுவத்தின் ஈடுபாட்டை குறைக்க வேண்டும் என்பதுடன் நிலத் தகராறுக்கு ஒளிவு மறைவு அற்ற முறையில் தீரவு காணப்பட வேண்டியதும் முக்கியமானதாகும்.

இன, மத சிறுபான்மை சமூகங்களின் அன்றாட வாழ்வை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முக்கியமானவை. எந்த மதத்தின் பிரதிநிதிகளினதும் அச்சுறுத்தலுக்கு தாங்கள் உள்ளாகாமல் இருப்பதாக மக்கள் உணரவேண்டும். மக்கள் தங்களது தெரிவுக்குரிய மொழிகளைப் பயன்படுத்துவதற்கான சுதந்திரத்தைக் கொண்டிருக்க வேணடும். இன்னும் கூட பல அரசாங்க ஆவணங்கள் தமிழ் மொழியில் இல்லை. அந்த குறைபாடு உடனடியாக சீர்செய்யப்பட வேண்டும்.

மாகாணசபை தேர்தல்களை எல்லைநிர்ணய நடவடிக்கைக்காக தாமதிக்கக்கூடாது. கிழக்கில் சிரேஷ்ட அரசாங்க பதவி நியமனங்கள் தமிழ்பேசும் பெரும்பான்மையை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். திருகோணமலை அல்லது அம்பாறையில் இதுகாலவரையில் தமிழர் ஒருவர் அரசாங்க அதிபராக பதவி வகிக்கவில்லை. பொலிஸ் திணைக்களம் தொடக்கம் வங்கிகள், வனப் பாதுகாப்பு சேவைகள் வரை அரச திணைக்களங்களில் இந்த பாகுபாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அந்தத் திணைக்களங்களில் தமிழ் பேசுபவர்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே இருக்கிறார்கள். கிழக்கில் தமிழ் பேசுபவர்கள் பெரும்பாலும் இரு மொழிகளை கையாளக் கூடியவர்களாக இருக்கின்ற போதிலும், சிங்கள மொழியிலேயே நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. மிகவும் அரிதாக தமிழ் பய்படுத்தப்படுகிறது. இந்த ஏற்றத்தாழ்வு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடும் போது கிழக்கில் அபிவிருத்தி மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. வரலாற்று ரீதியாக கிழக்கின் தலைநகராக விளங்கும் மட்டக்களப்பு மாகாணசபைகள் முறை நிறுவப்பட்ட பிறகு அதன் மைய அந்தஸ்தை இழந்துவிட்டது. ரெலிக்கொம், வரி அறவீடு மற்றும் மாகாண நிருவாகம் போன்ற முக்கியமான சேவைகள் வேறு எங்கோ இருக்கின்றன.


அதனால் மட்டக்களப்பு பின்தங்கியதாக விடப்பட்டிருக்கின்ற அதேவேளை பொலநறுவை மற்றும் அம்பாறை போன்ற நகரங்கள் துரித முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றன. போக்குவரத்து தொடர்புகளும் கவனிக்கப் படுவதாக இல்லை. மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கோ அல்லது திருகோணமலைக்கோ ரயில் சேவை இல்லை. மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு குளிரூட்டப்பட்ட பஸ் சேவை கிடையாது. இந்தக் குறைபாடுகள் எல்லாம் தாங்கள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக அந்த பகுதி மக்கள் மத்தியில் இருக்கும் உணர்வை மேலும் வலுப்படுத்துகின்றன. இந்த புறக்கணிப்பும் ஓரங்கட்டலும் மடடக்களப்புக்கு மாத்திரம் மட்டுப்பட்டதாக இல்லை, வடக்கு, கிழக்கில் ஏனைய பாகங்களிலும் இதே நிலைமைதான்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத் தொடருக்கு தேவைப்படுவது நோக்கங்கள் பற்றிய இன்னோர் அறிக்கை அல்ல. நீதியை வழங்கக்கூடிய, மொழி மற்றும் மத உரிமைகளை உத்தரவாதம் செய்யக்கூடிய, அரசாங்க சேவைகளில் நேர்மையான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யக்கூடிய, அபிவிருத்தியில் சமத்துவத்தை நிலைநிறுத்தக்கூடிய வலுவான ஒரு திட்டமே இன்று தேவைப்படுகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத் தொடரில் எடுக்க வேண்டிய நிலைப்பாட்டை தீர்மானிப்பதற்கு எதிரணிக் கட்சிகளுடனும் சிவில் சமூகத்துடனும் ஆக்கபூர்வமான பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
வழக்கில் சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். தொட்டது துலங்கும்.

**இடபம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**மிதுனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும் சூழ்ச்சிகளை முறியடிப்பீர் தேவைகள்பூர்த்தியாகும்.

**கடகம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நேர்மறை சிந்தனைகள் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். சக ஊழியர்கள் மதிப்பார்கள். தடைகள் உடைபடும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் அவசர முடிவுகளை தவிர்க்கவும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**துலாம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போவது நல்லது. உத்தியோகத்தில் மறைமுக பிரச்னைகள் வரக்கூடும்.

**விருச்சிகம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சிறப்பான நாள்.

**தனுசு**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். அதிகாரி உங்களை மதிப்பார். திருப்பம் நிறைந்த நாள்.

**மகரம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக போய் முடியும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும். பொறுமை தேவைப்படும்.

**மீனம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

# வெளிநாட்டிலிருந்து வந்தவரிடம் ரூ. 1.4 கோடி திருட்டு; 10 பேர் கைது!

வடமராட்சி, ஒக. 28

வெளிநாட்டிலிருந்து வந்து நெல்லியடியில் தங்கியிருந்த ஒருவரிடம் சுமார் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாயை திருடிய சம்பவம் தொடர்பில் 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வெளிநாடொன்றி லிருந்து நாடு திரும்பிய ஒருவர் நெல்லியடியில் தங்கியிருந்துள்ளார். அவர் தனது வீட்டில் வெளிநாட்டு நாணயதாள்கள் உட்பட பணத்தை வைத்திருந்துள்ளார்.


இந்நிலையில் கடந்த சில தினங்களாக தனது பணம் காணாமல் போவதை அறிந்து இந்த விடயம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலைய பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , குறித்த நபரின் வீட்டில் வேலை செய்யும் இருவர் தொடர்பில் சந்தேகமடைந்து இருவரையும் கைது செய்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின்போது, இருவரும் வீட்டிலிருந்த வெளிநாட்டு நாணயத்தை திருடியதுடன், அதனை தமக்கு தெரிந்தவர்கள் மூலமாக வங்கி ஒன்றில் கொடுத்து இலங்கை நாணயமாக பெற்றுக் கொண்டமையை ஒப்புக்கொண்டனர்.

அவர்களுக்கு உடந்தையாக செயல்பட்ட மேலும் 8 பேரை பொலிஸார் கைது செய்தனர். அத்துடன், திருடப்பட்ட பணத்தில் 40 இலட்சம் ரூபாயை கைப்பற்றினர்.

ஏனைய பணத்தை மீட்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)



## வட மாகாண கடற்படை தளபதி யாழ். அரச அதிபருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக. 28

வட மாகாண கடற்படை தளபதியாக புதிதாக பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இந்த சந்திப்பில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், உதவி மாவட்டச்செயலாளர் உ. தர்சினி ஆகியோரும் உடனிருந்தார்கள். (ஐ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 28

மகாத்மா காந்தி ஆசிரமத்தின் ஏற்பாட்டில் "நடைமுறையில் காந்தியக் கொள்கை" என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 18 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட இரு பாலாரும் கலந்து கொள்ள முடியும். இதில் சிறப்பு விருந்தினராக காந்திய சிந்தனையாளர் மதுரை பேராசிரியர் க. பழனித்துரை கலந்து கொள்ளவுள்ளார்.

இதில், பங்கேற்க விரும்புபவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் 4ஆம் திகதிக்கு முன்னர் 077 031 8824 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்ய முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# வவுனியாவிலும் நேற்று கையெழுத்து போராட்டம்!

வவுனியா, ஒக. 28

தமிழர்களுக்கு நிரந்தர தீர்வு எட்டப்படுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையிடமும் சர்வதேச சமூகத்திடமும் நீதி வேண்டி தமிழர் தாயகத்தின் 8 மாவட்டங்களில் மாபெரும் கையெழுத்து போராட்டமானது கடந்த 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தப் போராட்டம் இறுதி நாளான நேற்று வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்றது.




இதில், ஏராளமான பொதுமக்கள் கையொப்பமிட்டுச் சென்றனர். இந்தப் போராட்டம் தாயகச் செயலணி எனும் அமைப்பால் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-10)

## வெற்றிலை துப்பியவருக்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதம்

வடமராட்சி, ஒக. 28

பொது இடத்தில் வெற்றிலையை மென்று துப்பிய நபருக்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம்.

பருத்தித்துறை மீன் சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரி ஒருவர் சந்தையில் வெற்றிலையை மென்று பொது இடத்தில் துப்பியமைக்காக பொது சுகாதார பரிசோதகரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தார்.

வழக்கு விசாரணையின் போது நீதிமன்றில் முன்னிலையான வியாபாரி தன்மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, அவரை எச்சரித்த நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலைப் பாதுகாக்க இணையவில்லை ஜனநாயகத்தை காக்கவே இணைந்தோம்

## கூறுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஒக. 28

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப் பதற்காக எதிர்க்கட்சிகள் அனைத்தும் தற்போது ஒன்றிணையவில்லை.ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே ஒன்றிணைந்துள்ளோம்.அரசாங்கத்தின் சர்வாதிகார போக்குக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சட்டவாட்சி மற்றும் ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயற்பட்டார்.வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கினார். தேர்தலை நடத்தினார்.

எமது அரசாங்கம் ஜனநாயகம் மற்றும் சட்டவாட்சி கோட்பாட்டை முன்னிலைப்படுத்தியே செயற்பட்டோம். ஜனநாயகம் என்றால் என்னவென்று மக்கள் விடுதலை முன்னணிக்கு பாடம் கற்பிக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பதற்காக எதிர்க்கட்சிகள் அனைத்தும் தற்போது ஒன்றிணையவில்லை.ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே ஒன்றிணைந்துள்ளோம். நிறைவேற்று அதிகாரமிக்க முன்னாள் ஜனாதிபதி ஒருவர் அரசியல் பழிவாங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை இதுவே முதன்முறையாகும்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் அரசியலமைப்புடனான சர்வாதிகாரத்தை செயற்படுத்துகிறது.

இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.இதுவரை இந்த குற்றச்சாட்டுக்கள் ஏதும் விசாரிக்கப்படவில்லை. இதுவா சட்டத்தின் முன் அனைவரும் சமம். அரசாங்கத்தின் சர்வாதிகார போக்குக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும்-என்றார். (அ)

# எதிர்க்கட்சிகள் பலமான கூட்டணி உருவாக்க அரசாங்கமே அடிக்கல்!

## ரஞ்சித் மத்துும பண்டார சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 28

நீதிமன்றம் நியாயத்தை நிலைநாட்டியுள்ளது. தேசிய மக்கள் சக்தியை வீட்டுக்கு அனுப்புவதற்கான பலமான கூட்டணியை உருவாக்குவதற்கு அரசாங்கமே அடிக்கல் நாட்டியிருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.



முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு பிணை வழங்கப்பட்டமை தொடர்பில் நேற்று கருத்து வெளியிட்ட அவர்-

நீதிமன்றம் நியாயத்தை நிலைநாட்டியுள்ளது. ஜனநாயகத்தை இல்லாதொழித்து எமது உரிமைகளை பறிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தது.

அந்த அடக்குமுறைக்கு எதிராக எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாம் ஒன்றிணைந்து குரல் கொடுத்தோம். இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான சக்தியை உருவாக்குவதற்கு அரசாங்கம் அடிக்கல் நாட்டியுள்ளது.

நாட்டில் 60 சதவீத விருப்பத்தைப் பெற்ற எதிர்க்கட்சிகள் ஒன்று ஒரணியில் ஒன்று திரண்டுள்ளன. அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக தொடர்ந்தும் இந்த ஒற்றுமையுடன் செயற்படுவோம்.

பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் அரசாங்கத்துக்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுத்துக் கொண்டிருப்போம். சர்வதேசத்துடனும் இணைந்து அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம்-என்றார். (அ)

# ராஜித தொடர்ந்தும் தலைமறைவு

கொழும்பு, ஒக. 28

கைது செய்யப்படுவதைத் தவிர்த்து வரும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் சொத்துக்களை பறிமுதல் செய்ய உத்தரவிடக் கோரி, கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

கொழும்பு தலைமை நீதவானிடம் நேற்று முன் தினம் குறித்த மனுவைத் தாக்கல் செய்த இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, ராஜித சேனாரத்னவின் பெயரில் பதிவு செய்யப்பட்ட ரூ.30 மில்லியன் மதிப்புள்ள சொத்துக்களை பறிமுதல் செய்யக் கோரியுள்ளது.

முன்னதாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முன்வைத்த சமர்ப்பிப்புகளைத் தொடர்ந்து, கொழும்பு நீதவான் நீதிமன்றம் ராஜித சேனாரத்னவை கைது செய்யப் பிடியாணை பிறப்பித்தது.

இந்தநிலையில் அவர் தலைமறைவாகியுள்ளதுடன், அவரது தொலைபேசி இணைப்புகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் அவர் வேண்டுமென்றே கைது செய்வதைத் தவிர்த்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (அ)

# ரணில் தொடர்ந்தும் வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக. 28

அடுத்த சில நாட்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெறுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வைத்தியர்களின் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என வைத்திய நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளதாக அவரது அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சை முடிந்த பிறகு அனைத்து தரப்பினருக்காகவும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்று வாரென எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# சிறந்த அரச நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்கு சகல தரப்பும் பொறுப்புடன் செயற்படவேண்டும்

## நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக. 28

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொது மக்கள் மத்தியிலும், அரசியல் கட்டமைப்பிலும் எழுந்துள்ள சந்தேகத்தை கருத்திற் கொள்ள வேண்டும்.அவை களையப்பட வேண்டும்.சிறந்த அரச நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்கு சகல தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

நாட்டின் அரச தலைவருக்கு தண்டனை விலக்களிக்கக்கூடாது என்பதை ஏற்கிறோம். நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கமானது நாட்டின் நன்மைக்காக அரசியல் கலாசாரத்தை முதலில் உறுதிப்படுத்த வேண்டும் என்பதை குறிப்பிட்டுக்கொள்கிறோம்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை முழுமையாக இரத்துச் செய்யப்பட வேண்டும். அப்போது தான் நியாயமான சமூகத்தை கட்டியெழுப்ப ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை முழுமையாக இல்லாதொழிக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்துக் கொண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வெளிப்படையான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இதற்கமைவாகவே அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட்டது.ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அவர் கைது செய்யபட்டார். இவரை கைது செய்யும் போது நபர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் செயற்பட்ட விதம் தொடர்பில் பாரிய சந்தேகம் எழுந்துள்ளமை அவதானத்துக்குரியது.

யூடியூபரான சுதந்த திலகசிறி என்பவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசாரணைக்கு முன்னிலையாகுவதற்கு முன்னதாகவே அவர் கைது செய்யப்படுவார்.விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்று உறுதியாக குறிப்பிட்டிருந்தார்.இதன் பின்னரே ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுகிறார்.ஆகவே இது திட்டமிட்ட அரசியல் செயற்பாடு என்று தோன்றுகிறது.

ரணில் விக்கிரமசிங்க மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும்போது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை மறந்து அதற்கு பதிலாக தண்டனைச் சட்டக் கோவையின் 386 மற்றும் 388 உறுப்புரை மற்றும் 1982 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பொது சொத்து சட்டத்தை பயன்படுத்தியுள்ளமை பிணை வழங்க முடியாத நிலைமையை ஏற்படுத்துவதற்காகவா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கான சட்ட உரிமை பெறலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதைத் தடுப்பதற்காகவே அவர் வெளிக்கிழமையன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தால் அதுவும் முறையற்றதொரு செயற்பாடாகும்-என்றுள்ளது. (அ)

# பாரவூர்தி மோதி யானை குட்டி பலி!

கொழும்பு, ஒக. 28

தம்புள்ளை - ஹபரணை வீதியில் ஹிரிவடுன்ன பகுதியில் பாரவூர்தி மோதி யானை குட்டி ஒன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை அதிகாலை 03.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிமெந்து ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சர்வாதிகாரத்தை கைவிடாவிட்டால் எதிரணி கூட்டு மேலும் வலுவடையும்!

## அரசை எச்சரிக்கிறார் துமிந்த திஸாநாயக்க

கொழும்பு, ஒக. 28

தனது சர்வாதிகாரத்தை தேசிய மக்கள் சக்தி கைவிடாவிட்டால், எதிரணிகளின் கூட்டு அரசியல்போர் மேலும் வலுவடையும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க கூறியவை வருமாறு-

இலங்கையில் பல கட்சிகள் இருக்கின்றன. இவ்வாறு ஜனநாயகம் வலுவடையும். ஆளுங்கட்சி இழைக்கும் தவறுகளை சுட்டிக் காட்டும் உரிமை எதிரணிகளுக்கு உள்ளது. இலங்கையை வடகொரியா போன்று ஆக்குவதற்கு இடமளிக்க முடியாது.



அனைத்து எதிரணிகளும் ஒரு மேடைக்கு வந்துள்ளது. எனவே, இந்த அரசாங்கம் தான் கூறுவது மட்டுமே சரி என்ற நினைப்பில் சர்வாதிகாரமாக செயற்படக்கூடாது. அவ்வாறு செயற்பட முற்பட்டால் அதற்கு எதிராக எதிரணிகளின் கூட்டு நடவடிக்கை தொடரும்.

நாம் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முற்படவில்லை. காலை வாரவும் போவதில்லை. அதே போல எமது அரசியல் பயணத்தை முடக்குவதற்கும் இடமளிக்கப் போவதில்லை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் முன் அனைவரும் சமம் அதில் பின்வாங்கப் போவதில்லை!

## ஜனாதிபதி அநுர திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 28

**எத்தகைய எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டாலும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற எமது கொள்கையில் இருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



அலரி மாளிகையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தேசிய பிக்குகள் மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அனைவரும் சட்டத்தின் சமமே என்ற கலாசாரம் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் உருவாக்கப்படும். செல்வம், அதிகாரம், பதவி இவை எதுவும் அதற்கு விதிவிலக்கல்ல. சட்டத்தின் முன்பு அனைவரும் சமமே. எமது நாட்டில் என்றோ ஒருநாள் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும் அல்லது பொதுமக்களின் சொத்தினை வீணடித்திருந்தாலும் அவர்கள் அனைவரும் சட்டத்தின் முன்னிறுத்தப்படுவார்கள்.

அதற்கான அதிகபட்ச நடவடிக்கை எடுக்கப்படும். அதுபழிவாங்கல் அல்ல. தண்டிக்கப்படுவதுமல்ல. நீதித்துறை தொடர்பிலான நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இன்று நாட்டில் பொதுவெளியில் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை தொடர்பாக நம்பிக்கையற்ற நிலை காணப்படுகிறது. அனைவரும் ஒரே சட்டம் என்ற அடிப்படையில் நாம் நடவடிக்கை எடுப்போம். எமது இந்த தீர்மானத்தில் இருந்து நாம் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம். அரசியல்வாதிகள் தங்களின் அதிகாரபலத்தின் ஊடாக மக்களின் சொத்துக்களை வீணடிப்பதற்கு இடமளிக்க மாட்டோம் என்பதை நாம் நிரூபித்துள்ளோம்- என்றார். (அ)

# சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவோருக்கு புதிய வசதி

கொழும்பு, ஓக. 28

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவோருக்கு மருத்துவ சான்றிதழ்களை வழங்குவதற்கான இணைய முறையை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என துறைமுகங்கள் மற்றும் சிவில் வானூர்தி போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித ருவான் கொடித்துவக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவோருக்கு அச்சிடப்பட்ட மருத்துவச் சான்றிதழ்களை வழங்கும் நுகேகொடையின் மருத்துவ நிறுவனத்தில் ஏராளமான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனையடுத்தே இணைய முறை அறிமுகப்படுத்தப்படுவதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது, நுகேகொடையில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் சாரதி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பிப்போருக்கு அச்சிடப்பட்ட மருத்துவச் சான்றிதழ்களை வழங்குகிறது.

இந்த செயல்முறை வெளிப்படைத்தன்மை இல்லாதது மற்றும் முறைகேடுகளுக்கு வழிவகுத்தது என்பது தெரியவந்துள்ளதாக பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சாரதி அனுமதிப் பத்திரம் காலாவதியாகும் போது, அதைப் புதுப்பிக்க மக்கள் வேரஹெரவுக்கு செல்ல வேண்டும்.

இது குறிப்பிடத்தக்க சிரமத்தை ஏற்படுத்துகிறது.

கைரேகைகளை வழங்குவதற்கே அவர்கள் நேரில் வரவேண்டியுள்ளது.

எனினும் அடுத்த ஒரு மாதத்திற்குள், இந்த முறையையும் மாற்றப்பட்டு, வேரஹெரவிற்குச் செல்லாமல் சாரதி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் பிரதி அமைச்சர் ஜனித ருவான் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (அ)

# சட்டம் கடமையை செய்வது அரசியல் பழிவாங்கல் அல்ல!

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன

கொழும்பு, ஓக. 28



“போராட்டங்கள் மூலம் சட்டம் அமுலாவதை தடுக்க முடியாது. சட்டம் தனது கடமையை செய்வது அரசியல் பழிவாங்கல் அல்ல.” - என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

போராட்டம் நடத்தும் உரிமை உள்ளது. அந்த ஜனநாயக உரிமையை மதிக்கின்றோம். அதேபோல நாட்டில் சட்டமும் தனக்குரிய கடமையை செய்யும். போராட்டம் மூலம் அதனை தடுக்க முடியாது.

எதிரணிகளின் ஒன்றிணைவு ரணிலை பாதுகாக்கும் முன்னணி அல்ல , அது அவர்களுக்கும் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சியாகும்.

எவரையும் பழிவாங்கும் தேவைப்பாடு அரசாங்கத்துக்கு கிடையாது. சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கைகள் இடம்பெறும்.

கடந்த காலங்களிலேயே பிரதமர் நீதியரசர் அரசியல் பழிவாங்கலுக்கு உள்வாங்கப்பட்டார். சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டார்-என்றார். (அ)

# தனிக்கட்சி ஆட்சி முறை முயற்சி இலங்கையில் வெற்றியளிக்காது!

## சுட்டிக்காட்டுகிறார் மகிந்த அமரவீர



கொழும்பு, ஓக. 28

“சில நாடுகளில்போல தனிக்கட்சி ஆட்சி முறைமையை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சி இலங்கையில் வெற்றியளிக்காது.”-என்று முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடந்த ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது ரணில் விக்கிரமசிங்கதான் சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டார். அவருக்கு சுதந்திரக் கட்சி ஆதரவளித்தது. அந்த முடிவு தொடர்பில் இன்றும் நாம் பெருமையடைகின்றோம். ரணில் இட்ட சிறப்பான அடித்தளத்தால்தான் இந்த அரசாங்கத்தாலும் பயணிக்கக் கூடியதாக உள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்தது. அவற்றை தற்போது நிறைவேற்ற முடியாதுள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்ற முடியவில்லை. அதனால்தான் எதிரணிகளை முடக்கி தமது இருப்பை தக்க வைப்பதற்கு முயற்சிக்கின்றது.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்களே அக்கட்சியை விமர்சிக்க தொடங்கியுள்ளனர். அரசாங்கம் செய்யும் தவறுகளை கண்டு நாம் அமைதி காக்கப் போவதில்லை. ஆட்சியை கவிழ்க்க முற்படவில்லை. ஆனால் தவறு நடந்தால் நிச்சயம் அவற்றை சுட்டிக்காட்டுவோம்.

எதிரணிகளை ஒடுக்கி தனிக்கட்சி ஆட்சியை முன்னெடுக்கவே முயற்சி எடுக்கப்படுகின்றது. ஆனால் இலங்கை போன்ற நாட்டில் அந்நிலைமையை ஏற்படுத்துவது கடினம்-என்றார்.

# ஹேமந்தவுக்கு பிணை

கொழும்பு, ஓக. 28

இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை மருத்துவமனையின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ரணசிங்கவுக்கு நேற்று முன் தினம் பிணை வழங்கப்பட்டுள்ளது.

ரூபாய் 10 இலட்சம் ரொக்கப் பிணை, ரூபாய் 25 இலட்சம் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணை மற்றும் பயணத் தடையுடன் கொழும்பு நீதவான் நீதிமன்றம் அவரை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டது.

2024 ஆம் ஆண்டு, சிறைச்சாலை சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக இருந்த போது, அவர் இலஞ்சம் பெற்றார் எனும் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நிலையான வளர்ச்சி நிலையை பதிவு செய்தது ஆடை ஏற்றுமதி

கொழும்பு, ஓக. 28

இலங்கையின் ஆடை ஏற்றுமதி 2025 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில் நிலையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கையின் ஆடை ஏற்றுமதி கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலையில் 414.38 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது அது, தற்போது 9.84 வீதம் அதிகரித்து 2025 ஆம் ஆண்டில் 455.16 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளதாகக் கூட்டு ஆடைச் சங்க மன்றம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதி 26 சதவீதம் வலுவான இலாபத்தைப் பதிவு செய்துள்ளது.

அதே நேரத்தில் “ஏனைய” சந்தைகளுக்கான ஏற்றுமதி 24 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அந்த மன்றம் தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் பிரித்தானிய சந்தையில் 0.72 சதவீதம் மட்டுமே சிறிய அதிகரிப்பு காணப்பட்டது, அத்துடன் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 2.7 சதவீதம் குறைந்துள்ளதாகக் கூட்டு ஆடைச் சங்க மன்றம் தெரிவித்துள்ளது. (அ)

# தேசியப் பட்டியல் ஊடாக சபைக்கு வரும் திட்டம் ரணிலுக்கு கிடையாது!

கொழும்பு, ஓக. 28

தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றம் வருவதற்குரிய திட்டம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தரான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ரவி கருணாநாயக்க, பைசர் முஸ்தபா ஆகிய தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் பதவி விலகி, ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடமளிக்கவுள்ளனர் எனவும், ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பாராளுமன்றம் வருவார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது பற்றி வினவியபோதே நவீன் திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விவகாரம் பற்றி எதிரணிகளுக்கிடையில் கலந்துரையாடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

“ரணில் விக்கிரமசிங்கதான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பிரதான அச்சுறுத்தல். அதனால்தான் அவர் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்.”-எனவும் நவீன் குறிப்பிட்டார். (அ)

# அமெ. காங்கிரஸ் உறுப்பினர்கள் இரண்டு பேர் இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஓக. 28

இலங்கையுடன் அரச நிர்வாகம், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வதற்காக அமெரிக்காவிலிருந்து இரண்டு கட்சிகளின் காங்கிரஸ் உறுப்பினர்கள் இலங்கை வந்துள்ளனர்.

இதனை அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக நடைமுறைகளை வலுப்படுத்துவது குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள, குறித்த அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கையின் சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் மூத்த அரச அதிகாரிகளுடன் சந்திப்புகளைத் திட்டமிட்டுள்ளனர்.

அமெரிக்க பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் இரண்டு கட்சிகளின் உறுப்பினர்களது இந்த முயற்சி, ஜனநாயக பங்களிப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதாக அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாரையும் பழிவாங்கவில்லை இனியும் பழிவாங்க மாட்டோம்

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஓக. 28

**ஆட்சியில் உள்ள தரப்பு எதிர்க்கட்சிக்கு சென்றவருடன் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளுக்காக முன்னிலையாவது இலங்கையின் அரசியல் கலாசாரம். நாங்கள் யாரையும் பழிவாங்கவில்லை. இனியும், பழிவாங்கப் போவதில்லை என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எதிர்கால அரசியல் திட்டமிடலுக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக நாங்கள் ஒன்றிணையவில்லை. பெரும்பான்மை அதிகாரம் உள்ளதால் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயல்படுகிறது.

ஆட்சியில் உள்ள தரப்பு எதிர்க்கட்சிக்கு சென்றவருடன் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளுக்காக முன்னிலையாகுவது இலங்கையின் அரசியல் கலாசாரம்.

இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தான் அரசியல் பழிவாங்கல்களாக பெரிதும் பாதிக்கப்பட்டாரகள்.

நாங்கள் யாரையும் பழிவாங்கவில்லை.இனியும் பழிவாங்கப்போவதில்லை.

வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயல்பட்டால் பிரச்னைகள் மாத்திரமே மிகுதியாகும்.

மக்கள் விடுதலை முன்னணி கடந்த காலங்களிலும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயல்பட்டது. இன்றும் வெறுப்புடன் செயல்படுகிறது.

ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இன்று ஆட்சியில் இருப்பவர்கள் எதிர்காலத்தில் எதிர்கட்சிக்கு செல்லலாம். ஆனால், ஜனநாயகம் என்றும் உறுதியாக பேணப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# ரணிலுக்கு இதய அறுவை சிகிச்சை உடனடியாக செய்யப்படவேண்டும்

## வைத்தியர் ருக்ஷன் பெல்லன கருத்து

கொழும்பு, ஓக. 28

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உடனடியாக இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லன தெரிவித்துள்ளார்.



அறுவை சிகிச்சையை தேசிய வைத்தியசாலையில் மேற்கொள்வதற்காக காத்திருப்புப் பட்டியலில் இருக்க வேண்டும் எனவும், அவ்வாறு முடியாவிடின் தனியார் வைத்தியசாலைக்குச் சென்று அதைச் செய்யும் வாய்ப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அவரது இதயத்தில் சில சிக்கல்கள் உள்ளன.விரைவில் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தினால் நல்லது.

பிணை வழங்கப்பட்டதால் அறுவைச் சிகிச்சைக்காக அவர் விரும்பும் வைத்தியசாலைக்கு செல்லலாம்.

தேசிய வைத்தியசாலையில் காத்திருப்புப் பட்டியல் சில நேரங்களில் சுமார் 3 ஆண்டுகள் ஆகும்.

எனவே, அவர் தனது சொந்த செலவில், விரும்பும் வைத்தியசாலையில் அதை விரைவாகச் செய்ய முடியும்.

தற்போது, அவருக்கு கொரோனரி தமனிகளில் அடைப்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அவருக்கு நீரிழப்பும் உள்ளது.

அந்த நிலை படிப்படியாக சரி செய்யப்பட்டு வருகிறது.

அந்த நேரத்தில், அவரது இருதயம் பலவீனமாக இருப்பதைக் கண்டறிய முடிந்தது.

அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவர அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்-என்றார். (அ)

# "மலையக தமிழ் மக்கள்" என விரவில் அரசியல் அங்கீகாரம்

## அமைச்சர் விஜித ஹேரத் கருத்து

கொழும்பு, ஓக. 28

மலையக மக்களை "மலையக தமிழ் மக்கள்" என அரசியல் ரீதியாக அங்கீகரிப்பது, அந்த சமூகத்திற்கு ஒரு மரியாதை, அங்கீகாரம் மற்றும் பெருமையைக் கொடுக்கும் செயலாகும். அதற்கான நடவடிக்கைகள் இனியும் தாமதப்படுத்தப்படமாட்டாது என உறுதியளிப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த உறுதிப்பாட்டை நிறைவேற்றுவதற்கு தேவையான சட்ட சீர்திருத்தங்களை அரசாங்கம் முறையாக மேற்கொண்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

"அரசாங்கம் என்ற ரீதியில் இந்தக் குறுகிய காலத்திற்குள், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான எங்கள் பொறுப்புடன் நாங்கள் முன்னேறி வருகிறோம்" எனவும் அவர் கூறினார்.

"மலையக மக்கள்" பிறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்களில் அதிகாரபூர்வமாக "மலையகத் தமிழ் மக்கள்" எனப் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"அவர்கள் நமது நாட்டின் பிரஜைகளாக முழுமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். மேலும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அவர்கள் சொந்த வீடுகள், நிலம், தரமான கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து வசதிகளைப் பெறத் தகுதியானவர்கள்.

இந்த நோக்கத்திற்காகவே ஹற்றன் பிரகடனம் முன்வைக்கப்பட்டது.

அது முறையாக செயல்படுத்தப்பட வேண்டும்.இவர்கள் நமது நாட்டில் நீண்டகாலமாக துன்பப்பட்ட மக்கள், வறுமை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வசதிகளை எதிர்கொண்டவர்கள்.

இந்த யதார்த்தத்தை நாம் பல தசாப்தங்களுக்கு முன்பே ஒப்புக்கொண்டோம்.இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். எனவே, இதில் மேலும் தாமதங்கள் ஏற்படாது என நாங்கள் உறுதியளிக்கிறோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# இலஞ்சம் பெற்ற பெண் கிராம அலுவலர் கைது

கொழும்பு, ஓக. 28

கொவிதுபுர பகுதியைச் சேர்ந்த பெண் கிராம சேவகர் ஒருவர் இலஞ்சம் வாங்கியதற்காக இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள பெண் கிராம சேவகர் பரவாய கிராம சேவையாளர் பிரிவில் பணி புரிபவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி வாங்குவதற்காக 23,500 ரூபாய் பெறுமதியான பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டிருந்தபோது, குறித்த கிராம சேவகர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட பெண் கிராம சேவகர் சியம்பலாண்டுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# ரணிலை ஆதரித்த அனைவருக்கும் நன்றி கூறிய ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஓக. 28

இந்தக் காலகட்டத்தில் தனது கட்சி சார்பாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வருகை தந்த 500 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளுக்கும் பெருந்திரளான மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன் தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்-அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும், குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் மற்ற கட்சிகளின் சார்பாகவும் நாங்கள் நன்றி தெரிவிக்கவேண்டும்.

ஐநூறுக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் வந்தனர். குறிப்பாக ஒரு பெரிய மக்கள் கூட்டம் கூடியது.அதற்கெல்லாம் நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவிக்கவேண்டும் என்று நினைக்கிறேன். மேலும் ஒரு விடயத்தையும் சொல்ல வேண்டும். இந்த நீதித்துறையிலிருந்து சுயாதீனத்தை எதிர் பார்த்தோம்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு அநீதி இழைக்கப்பட்டதால் நாங்கள் எழுந்து நின்றோமே தவிர ஊழல், மோசடி மற்றும் திருட்டுக்காக போராடுபவர்கள் அல்லர் என்பதை மேலும் கூற வேண்டும்-என்றார்.

அதேநேரம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வந்த அனைவருக்கும் தனது நன்றியைக் கூறினார். (அ)

# குடும்பத் தகராறு காரணமாக கத்திக்குத்தில் இளைஞன் பலி!

கொழும்பு, ஓக. 28

அம்பாந்தோட்டை, பெலியத்தை பிரதேசத்தில் கத்திக் குத்துக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பெலியத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெலியத்தை, நிஹிலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்த இளைஞனின் உறவினர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கனரக வாகனங்கள் கொள்வனவு

கொழும்பு, ஓக. 28

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு புதிய கனரக வாகனங்களை கொள்வனவு செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சில உள்ளூராட்சி நிறுவனங்களில் கிராமப்புற அபிவிருத்திக்கு தேவையான பைக்கோ போன்ற இயந்திரங்கள் இவ்வாறு கொள்வனவு செய்யப்படவுள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

பல உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்போது அத்தகைய இயந்திரங்கள் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

தற்போதுள்ள இயந்திரங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளதால், குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு புதிய கனரக வாகனங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் சந்தன அபேரத்ன மேலும் தெரிவித்தார். (அ)

# கலேவெலவில் ஒருவர் கொலை கடற்படை சிப்பாய் கைதானார்!

கொழும்பு, ஓக. 28

கலேவெல, மகுலுகஸ்வெவ பகுதியில் நபரொருவர் கொடூரமாக தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

பொலிஸாரின் கூற்றுப்படி, 119 அவசர தொலைபேசி இலக்கத்தின் மூலம் ஒருவர் தாக்கப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டதாகக் கூறி முறைப்பாடு அளிக்கப்பட்டது.

விசாரணையின்போது, அந்த நேரத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பாதிக்கப்பட்டவரை, மற்றொரு நபர் மோட்டார் சைக்கிளில் சென்று வழிமறித்து, தாக்கி, பின்னர் கொலை செய்தார் என தெரியவந்துள்ளது.

இறந்தவர் தேவஷஹவ பகுதி யைச் சேர்ந்த 59 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக 26 வயதுடைய கடற்படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவருடன் நீண்ட காலமாக ஏற்பட்ட தகராறு காரணமாக சந்தேக நபர் இந்தக் கொலையைச் செய்துள்ளதாக விசாரணைகளில் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தம்புள்ளை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மகுலுகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் மனிதப் புதைகுழி

# ஸ்கான் பரிசோதனைக்கான உத்தேச செலவு சமர்ப்பிப்பு!

திருகோணமலை, ஒக. 28

**சம்பூர் மனிதப் புதைகுழியை ஸ்கான் மூலம் ஆராய்வதற்கான உத்தேச செலவு மூதூர் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன், இந்த வழக்கு அடுத்த மாதம் 2ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.**

சம்பூரில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கு மூதூர் நீதிமன்ற நீதிவான் தஸ்னீம் பௌஸான் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கடந்த, 6ஆம் திகதி நடந்த வழக்கு விசாரணைகளின்படி, குறித்த இடத்தில் மேலும் மனித எச்சங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதற்காக தொல்பொருள் திணைக்களத்திடமுள்ள ஸ்கான் இயந்திரம் மூலம் ஆராய்வதற்கான உத்தேச செலவை நீதிமன்றத்தில் சம்பூர் பொலிஸார் நேற்று முன்தினம் சமர்ப்பித்தனர்.

இந்த உத்தேச செலவானது மூதூர் நீதிமன்றத்தின் கட்டளையுடன் மாகாண மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படவுள்ளது.

அத்துடன், மாகாண நீதிமன்றத்தின் அனுமதியுடன் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்தோடு குறித்த வழக்கானது மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் செப்ரெம்பர் 2 ஆம் திகதி மீள அழைக்கப்படவுள்ளது.

சம்பூர் கடற்கரைப் பகுதியில் மிதிவெடி அகற்றுப் பணி இடம்பெற்று வந்த நிலையில் ஜுன் 20 ஆம் திகதி சில மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து மிதிவெடி அகற்றும் பணிகள் மூதூர் நீதிமன்ற அனுமதியுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## “கருணாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை அவசியம்”

கல்முனை, ஒக. 28

கருணாமீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். விசேடமாக பிள்ளையான இனிய பாரதி குழுக்களுடன் இயங்கியவர்கள் இப்போதும் கல்முனையில் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அவர்களும் விசாரிக்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் செயல்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கல்முனை ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசோடு ஒட்டு குழுக்களாக செயல்பட்ட பிள்ளையான், இனியபாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் கைதைத் தொடர்ந்து பலர் கைது செய்யப்படுகின்றனர். அவர்கள் கடந்த காலங்களில் பல வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களாக நேரடியான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன், அவர்களுடைய தலைமை ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டவர் கருணா. அவர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் நேரடியாக குற்றம்சாட்டப்படவில்லை. எனினும், அவரும் விசாரிக்கப்பட்டு அவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் - என்றார்.

## கசிப்புடன் மூவர் கைது

திருகோணமலை, ஒக. 28

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறால் குழி மற்றும் முன்னம்பொடிவெட்டை ஆகிய பகுதிகளில் கசிப்புடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூதூர் விசேட பொலிஸ் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், இறால் குழி காட்டு பகுதியில் இருவரும் முன்னம்பொடிவெட்டையில் ஒருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடமிருந்து 540 லீற்றர் கோடா, 52 லீற்றர் கசிப்பு என்பனகைப்பற்றப்பட்டன.

## கல்முனை வடக்கில் வர்த்தக சந்தை!

கல்முனை, ஒக. 28

அம்பாறை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் சிறு தொழில் முயற்சியாளர்களின் வர்த்தக சந்தை நேற்று முன்தினம் நடைபெற்றது.

“எமது உற்பத்திகளை நாமே வாங்கி எம்மவர்களை ஊக்கு விப்போம்” எனும் தொனிப் பொருளில் இந்த வர்த்தக சந்தை நடத்தப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் அதிசயராஜின் வழிகாட்டுதலில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் றமீஸா தலைமையில் வர்த்தக சந்தை ஒழுங்குபடுத்தப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 10இற்கும் மேற் பட்ட சிறுதொழில் முயற்சியா ளர்கள் பங்கு பற்றியதோடு தங்களது உற்பத்திப் பொருட் களையும் காட்சிப்படுத்தினர். (ஐ)

## அம்பாறையில் நெல் அறுவடை படையெடுக்கும் யானைகள்!

### அச்சத்தில் பொதுமக்கள்



கல்முனை, ஒக. 28

அம்பாறை மாவட்டத்தில் வேளாண்மை அறுவடை நிறைவடையும் தறுவாயில் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் வயல்களை நோக்கி படையெடுத்துள்ளன.

சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி, மாவடிப்பள்ளி, நிந்தவூர், இறக்காமம் உள்ளிட்ட பகுதிகளிலேயே யானைகள் இவ்வாறு பெருங்கூட்டமாக வருகை தருகின்றன.

அதிகளவில் யானைகள் வருவதால் பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர். அத்துடன், தாம் அறுவடைகளை மேற்கொள்ளமுடியாது உள்ள தாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதையடுத்து, யானைகளின் வரவை கட்டுப்படுத்த வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## தன்னாமுனை விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்

மட்டக்களப்பு, ஒக. 28

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தன்னாமுனை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தன்னாமுனை சந்தியில் முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதியே விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில், முச்சக்கர வண்டி சாரதியும் மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டியுடன் தன்னாமுனை தேவாலய குறுக்கு வீதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து சம்பவித்தது. (ஐ)

## போராட்டத்துக்கு ஆதரவளியுங்கள்

மட்டக்களப்பு, ஒக. 28

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு வாழைச்சேனை, ஏறாவூர்ப் பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் சந்திவெளியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர்களான கு.சுதாகரன், ஆ.சிவராசா, ஏறாவூர்ப் பற்று பிரதேச சபை உறுப்பினர் செ.நிலாந்தன் ஆகியோர் இந்த அழைப்பை விடுத்தனர். (ஐ)

## விழிப்புணர்வு கலந்துரையாடல்

மட்டக்களப்பு, ஒக. 28

மட்டக்களப்பில் மனநல ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வு உரையாடல் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு கல்லடி மனநல பிரிவு பணிமனையில் நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். முரளீஸ்வரன் தலைமை நடைபெற்ற கூட்டத்தில் துறைசார் மருத்துவ அதிகாரிகள், மனநல பிரிவு அதிகாரிகள், திணைக்களங்களின் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

அதிகரித்து காணப்படும் தற்கொலை, போதை வஸ்து பாவனை மற்றும் மது பாவனை தொடர்பாக துணை சார் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய




வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வாழைச்சேனை மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் வைத்தியர் மதன் உட்பட துறைசார் மருத்துவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஐ)

## மனித பாவனைக்கு உதவாத ஒருதொகை பழங்கள் சிக்கின

கல்முனை, ஒக. 28

சுகாதாரம் மற்றும் தரமிக்க உணவுப் பொருட்களைப் பொது மக்களுக்கு பெற்றுக்கொடுக் கும் நோக்கில் கல்முனை பிராந் தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு விற்பனை நிலையங்கள், பழக்கடைகள் என்பவற்றில் திடீர் சோதனைகள் நடத்தப் பட்டன.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்று முன்தினம் இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, சாய்ந்தமருது கடற்கரை வீதியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பழுதடைந்த ஒரு தொகை பழங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்தப் பழங்களை விற்பனைக்கு வைத்திருந்த வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விளையாடினால் சீனா அழிந்துவிடும்

## சீட்டாட்ட பாணியில் ட்ரம்ப் எச்சரிக்கை

வாஷிங்டன், ஓக. 28

**“எங்களிடம் மிகச்சிறந்த கார்ட்கள் உள்ளன. அந்தக் கார்ட்களை பயன்படுத்தி நான் விளையாடினால் சீனா அழிந்து விடும். அதனாலேயே நான் இப்போது அதைச் செய்யவில்லை - இவ்வாறு சீட்டாட்ட பாணியில் எச்சரித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்.**

அத்துடன், ”இந்த ஆண்டு இறுதியில் அல்லது அதற்கு பின்னராக நான் சீனாவுக்குச் செல்வேன். இரு நாடுகளுக்கும் இடையே சிறந்த உறவுகள் இருக்கும்”, என்றும் அவர் கூறியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப் மேலும் தெரிவித்தவை வருமாறு,

”அவர்களிடம் சில கார்ட்கள் உள்ளன. ஆனால், எங்களிடம் மிகச் சிறந்த கார்ட்கள் உள்ளன. நான் அவற்றைக் கொண்டு விளையாட விரும்பவில்லை. நான் அந்த கார்ட்களை வைத்து விளையாடினால் சீனா அழிந்துபோதும். அதனால்தான் நான் இப்போது அதைச் செய்யவில்லை.

“அமெரிக்காவுக்கு அரிய மண் தாதுக்களின் விநியோகத்தை நிறுத்துவது போன்ற நடவடிக்கைகளை சீனா எடுத்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும். அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டால் சீனா மீது 200 சதவீதம் வரை வரிகளை விதிக்கத் தயங்கமாட்டேன்”, என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஜம்முவில் வெள்ளம் 31 பேர் உயிரிழப்பு!



சிறீநகர், ஓக. 28

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி 31 பேர் உயிரிழந்தனர்.

ஜம்மு காஷ்மீரின் பல மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் முக்கிய நதிகளான தாவி மற்றும் ராவியில் வெள்ளம் அபாய அளவுக்கு மேல் செல்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஈரானுடனான இராஜதந்திர உறவுகளை முறித்தது ஆஸி.

சிட்னி, ஓக. 28

ஈரான் அரசுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் முறித்துக்கொள்வதாக, அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரத்தில் அமைந்திருந்த யூதர்களின் உணவகம்மீது கடந்த 2024 ஒக்ரோபரிலும், மெல்பர்ன் நகரத்தில் யூதக் கோயில்மீது கடந்த 2024 டிசெம்பரிலும், தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களை ஈரான் அரசுதான் இயக்கியுள்ளது என்பதற்கு போதுமான ஆதாரங்களை அவுஸ்திரேலியாவின் புலனாய்வுத் துறை திரட்டியுள்ளதாக அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, ஈரானுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளும் முறிக்கப்படுவதாகவும், அந்நாட்டிலுள்ள அவுஸ்திரே லியர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அவர் கூறியுள்ளார்.

இத்துடன், அவுஸ்திரேலியாவுக்கான ஈரானின் தூதர் அஹமது சதேகி வெளியேற்றப்படுவார். அந்நாட்டிலுள்ள அவுஸ்திரேலிய அதிகாரிகள் அனைவரும் தாயகம் திரும்புமாறும் அவர் அறிவித்துள்ளார்.

மேலும், ஈரானின் புரட்சிகர பாதுகாப்பு படைகளை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க பிரதமர் அல்பானீஸ் திட்டமிடுகிறார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)



தனது குஞ்சுகளுக்காக புழு ஒன்றை சுமந்து செல்லும் குளவி. உலக வன விலங்கு புகைப்பட போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டவற்றில் பித்யுத் காலிதா என்பவர் எடுத்த இந்தப் புகைப்படம் அதிக பாராட்டுகளை பெற்றுள்ளது. வெற்றியாளர் விவரம் எதிர்வரும் ஒக்ரோபர் 14ஆம் திகதி அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு 50 வீத வரி நடைமுறை

வாஷிங்டன், ஓக. 28

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு விதித்த 50 வீத வரி நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்தியப் பொருட்களுக்கான வரிகளை 50 வீதமாக உயர்த்துவதாக அறிவித்திருந்தார்.

இதன்படி, இந்த வரி உயர்வு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

இதனிடையே, குஜராத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய இந்திய பிரதமர் மோடி, “எவ்வளவு அழுத்தம் வந்தாலும், அதைத் தாங்கும் வலிமையை நாங்கள் தொடர்ந்து அதிகரிப்போம்”, என்றார். (ஐ)

# வடகொரிய ஜனாதிபதியை சந்திக்க ஆவலாக உள்ளேன்

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

வாஷிங்டன், ஓக. 28

“வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னை மீண்டும் சந்திப்பேன் என்று நம்புகிறேன். அவரை சந்திப்பதற்காக நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்”, என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தென் கொரிய அதிபர் லீ ஜே மியுங் முதன் முறையாக வெள்ளை மாளிகைக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தார். இதன்போது, “இராஜதந்திரத்தை ஆதரிக்கும் முற்போக்கான கொள்கையுடைய தென் கொரிய ஜனாதிபதிய லீயைப் போலவே வட கொரியா உறவில் எனது நிலைப்பாடும் உள்ளது. எனது முதல் பதவிக்காலத்தில் மூன்று முறை கிம் ஜோங் உன்னை சந்தித்தேன். மீண்டும் ஒருநாள் நான் அவரைப் பார்ப்பேன். அவரை சந்திப்பதற்காக நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்.

அவர் என்னிடம் மிகவும் நன்றாக நடந்துகொண்டார். எனவே, அவருடன் இந்த ஆண்டு பேச்சு நடைபெறும் என்று நம்புகிறேன். நானும், கிம்மும் எங்கள் சந்திப்புகளின் போது மிக அன்பாகப் பழகினோம்.

இது பதற்றங்களை குறைத்தது. ஆனால், நீடித்த ஒப்பந்தத்தை உருவாக்க தவறி விட்டது” என்றார்

இதனைத் தொடர்ந்து பேசிய தென் கொரிய ஜனாதிபதி லீ, “ட்ரம்ப் அமெரிக்காவை அமைதியைக் காக்கும் நாடாக அல்ல, மாறாக அமைதியை உருவாக்கும் நாடாக மாற்றியுள்ளார். ஜனாதிபதி ட்ரம்ப், கிம் ஜோங் உன்னுடனான உங்கள் சந்திப்புக்கும், வட கொரியாவில் ட்ரம்ப் ரவர் கட்டுவதற்கும், அங்கு நீங்கள் கோல்ஃப் விளையாடுவதற்கும் நான் ஆவலுடன் காத்திருக்கிறேன். கிம்மும் உங்களுக்காக காத்திருப்பார்.

வடகொரியா விரைவில் வருடத்துக்கு 10 முதல் 20 அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய முடியும். அழுத்தம் மற்றும் தடைகள் இருந்தபோதிலும் அவர்களால் அமெரிக்காவை தாக்கக்கூடிய ஏவுகணையைக்கூட உற்பத்தி செய்ய முடியும்.

கடந்த மூன்று முதல் நான்கு ஆண்டுகளில் வடகொரியா வைத்திருக்கும் அணு ஆயுதங்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது என் பது கடினமான உண்மை” என்றார். (ஐ)

# எம். பிக்களின் ஊதியத்தை குறைக்குமாறு போராட்டம்!



ஜகார்த்தா, ஓக. 28


இந்தோனேசியாவில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் வசதிகளுக் காக செலவிடும் தொகையை குறைக்குமாறு மக்கள் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தோனேசியாவில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மாதாந்தம் ஊதியம் மற்றும் வீட்டு வசதிகள் உள்டங்கலாக ஒரு கோடி ரூபியா (9,500 டொலர்) நம் நாட்டு மதிப்பில் சுமார் 28 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. இது இந்தோனேசியாவின் சராசரி வருமானமான 60 ஆயிரம் இலங்கை ரூபாயை விட பல மடங்கு அதிகமாகும்.

இந்த நிலையில், பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு அவர்களின் சம்பளத்தை குறைக்குமாறு பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பாராளு மன்றத்தை முற்றுகையிட்ட அவர்கள் அங்கு நின்ற வாகனங் களை தீ வைத்து கொளுத்தினர். இதனால் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது. போராட்டத்தை ஒடுக்க கண்ணீர் புகைக் குண்டு வீசி பொது மக்களை பொலிஸார் அங்கிருந்து விரட்டினர். இதனை ய டுத்து பாராளுமன்றத்தைசுற்றியுள்ள பகுதியில் ஆயிரக்க ணக்கான பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐ.பி.எல். போட்டி அஸ்வின் ஓய்வு!

சென்னை, ஒக. 28

இந்திய அணியின் முன்னாள் வீரர் ரவிச்சந்த்திரன் அஸ்வின். ஐ. பி. எல். போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். கடந்த ஐ. பி. எல். தொடரில் சென்னை அணிக்காக அஸ்வின் விளையாடி இருந்தார்.

ஓய்வு குறித்து அஸ்வின் கூறியவை வருமாறு, ஒவ்வொரு முடிவும் ஒரு புதிய தொடக்கத்தைக் கொண்டிருக்கும் என்று கூறுகிறார்கள். ஓர் ஐ. பி. எல். கிரிக்கெட் வீரராக எனது நேரம் இன்று முடிவடைகிறது. ஆனால், பல்வேறு லீக்குகளைச் சுற்றியுள்ள விளையாட்டை ஆராய்பவராக எனது நேரம் இன்று தொடங்குகிறது.

பல ஆண்டுகளாக அனைத்து அற்புதமான நினைவுகள் மற்றும் உறவுகளுக்கும் மிக முக்கியமாக ஐ. பி. எல். நிர்வாகம் மற்றும் இந்திய கிரிக்கெட் சபைக்கும் இதுவரை எனக்கு ஆதரவு அளித்த அனைத்து அணி உரிமையாளர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு முன்னால் உள்ளதை அனுபவித்து சிறப்பாகப் பயன்படுத்த ஆவலுடன் காத்திருக்கிறேன் - என்றார்.

இதுவரை அஸ்வின் ஐ. பி. எல். தொடர்களில் 221 போட்டிகளில் விளையாடி 187 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். 98 இன்னிங்சில் 833 ஓட்டங்களை எடுத்துள்ளார். அத்துடன், 187 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். (ஐ)

# அமெரிக்க ஓபின் ரென்னிஸ் இகா, மரியா அடுத்த சுற்றில்



நியூயோர்க், ஒக. 28

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் தொடரில் இகா ஸ்வியாரெக், மரியா சக்காரி ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.


அமெரிக்க ஓபின் ரென்னிஸ் நியூயோர்க்கில் நடக்கிறது. இதில் முன்னணி வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் போலந்தைச் சேர்ந்த இகா ஸ்வியாரெக், கொலம்பியாவின் எமிலியானா அரங்கோவுடன் மோதினார்.

இதில், சிறப்பாக ஆடிய ஸ்யாரெக் 6-1 6-2 என்ற செற் கணக்கில் எளிதில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் கிரீஸ் வீராங்கனை மரியா சக்காரி 6-3, 6-2 என்ற செற் கணக்கில் ஜேர்மனியின் தத்ஜனா மரியாவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

# அமெரிக்க ஓபின் ரென்னிஸ் அல்காரஸ் 2ஆவது சுற்றில்!



நியூயோர்க், ஒக. 28

அமெரிக்க ஓபின் ரென்னிஸில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் நியூயோர்க்கில் நடக்கிறது. இதில் முன்னணி வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ், அமெரிக்காவின் ரெய்லி ஒபெல்கா உடன் மோதினார்.

இதில், சிறப்பாக ஆடிய அல்காரஸ் 6-4, 7-5, 6-4 என்ற செற் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

# 16 வயதில் கோல் அடித்து சாதித்த லிவர்பூல் வீரர்!




லிவர்பூல், ஒக. 28


லிவர்பூல் உதைபந்தாட்ட அணி வீரர் 16 வயதிலேயே கோல் அடித்து சாதனை படைத்துள்ளார். பிறீமியர் லீக்கில் குறைந்த வயதில் கோல் அடித்தவர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெறும் பிறீமியர் லீக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் லிவர்பூல் அணியும் நியூகேஸ்டல் அணியும் மோதின.

இந்தப் போட்டியில் 35, 46-ஆவது நிமிடங்களில் லிவர்பூல் அணியினர் கோல் அடிக்க, இரண்டாம் பாதியில் மீண்டெழுந்த நியூகேஸ்டல் அணியினர் 57, 88ஆவது நிமிடங்களில் கோல் அடித்து 2-2 என சமன்படுத்தினர்.

பின்னர், 96ஆவது நிமிடததில் மாற்றுவீரராக வந்த 16 வயதேயான லிவர்பூல் வீரர் ரியோ குமோகா 100ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார். (ஐ)

# கொல்கத்தா அணியின் தலைவராக கே. எல். ராகுல்?




கொல்கத்தா, ஒக. 28

கே. எல். ராகுலை டிரேடிங் முறையில் அணிக்கு வாங்கி அவரை அணித் தலைவராக்கும் முயற்சியில் கொல்கத்தா நைற் ரைடரஸ் அணி இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஐ. பி. எல். இருபது - 20 இன் 19ஆவது தொடர் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்காக அணிகள் தங்களை தயார்படுத்தி வருகின்றன.

கடந்த தொடரில் நடப்பு சம்பியனாக களமிறங்கிய கொல்கத்தா நைற் ரைடர்ஸ் படுதோல்வியை சந்தித்தது. அந்த அணி ரஹானே தலைமையில் களமிறங்கியிருந்தது. இந்த நிலையில், அந்த அணியில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

இந்த நிலையில், டில்லி கப்பிட்டலஸ் அணியின் வீரரான கே. எல். ராகுலை டிரேடிங் முறையில் வாங்குவதற்கு கொல்கத்தா அணி முயற்சி செய்கிறது. அத்துடன், ரஹானேவுக்கு பதிலாக அவரை அணித் தலைவராக நியமிக்கவும் அந்த அணி பரிசீலிக்கிறது.

கே. எல். ராகுல், ஐ. பி. எல். தொடரில் பஞ்சாப் கிங்ஸ், லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணிகளுக்கு தலைமை தாங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அதிகம் வருவாய் ஈட்டும் ரென்னிஸ் வீரராக அல்கராஸ்

நியூயோர்க், ஒக. 28

ஆயிரத்து 450 கோடி ரூபாயை (இலங்கை மதிப்பில்) கடந்த ஆண்டு வருமானமாக பெற்று அலகராஸ் ரென்னிஸ் விளையாட்டு துறையில் அதிகம் சம்பாதிக்கும் வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

ரென்னிஸ் உலகில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, இந்தப் பட்டியலில் இரண்டாம் நிலை வீரரான அல்காரஸ் ஆயிரத்து 450 கோடி ரூபாய் சம்பாதித்து முதலிடத்தில் உள்ளார். அவர், ரென்னிஸுக்கு வெளியே அதாவது, விளம்பர ஒப்பந்தம் மூலம் மட்டும் 1,053 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளார்.

அவருக்கு அடுத்த இடத்தில் ஜானிக் சின்னர் (இத்தாலி) ஆயிரத்து 425 கோடி ரூபாய் சம்பாதித்து 2ஆவது இடத்தில் இருக்கிறார். அமெரிக்க வீராங்கனை கோகோ காப் ஆயிரத்து 363 கோடி ரூபாய் வருவாய்



ஈட்டி 3-வது இடத்தில் உள்ளார். வீராங்கனைகளில் இவர் தான் முதல் இடத்தில் இருக்கிறார். 24 கிராண்ட்ஸ் லாம் பட்டங்களை வென்றவரான ஜோகோவிச் (செர்பியா) ரூ. 881 கோடியுடன் 4-வது இடத்தில் உள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த வருடத்தில்...

பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யூ.வுட்லர் தெரிவித்தார்.

இந்த விபத்துக்களில் 1,778 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், 3,428 பாரியளவான வாகன விபத்துக்களும், 6,241 சிறியளவான வாகன விபத்துக்களும் குறித்த காலப்பகுதியினுள் பதிவாகியுள்ளன எனவும் அவர் கூறினார். (அ)

## இ.போ.ச. யாழ்...

கொழும்பு சேவைக்காக கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், சிறீபவானந்தராஜா, இலங்கை போக்குவரத்துச் சபை துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## ரணிலை...

எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கச் சென்றதாக கூறப்படும் கூற்று தொடர்பில் பிரதமர் அலுவலகம் உரிய பதிலை அனுப்பியுள்ளது.

போலியான செய்திகளை பரப்புபவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும்.

இப்படிப் பொய்யான செய்திகளை உருவாக்க முடியாது. நான் சென்றிருந்தால், அதற்கான ஆதாரம் என்ன?

ஆதாரத்தை காட்டவும். இப்போது, யாரும் எதையும் கற்பனை செய்து செய்தி உருவாக்க முடியாது. நான் சென்றிருந்தால், அந்தத் தகவல் எங்கே இருந்து வந்தது? நீங்கள் என்னைப் பார்த்தீர்களா? புகைப்படமாவது இருக்கிறதா?

ஏனென்றால், பிரதமராக இருக்கும் எனக்கு விருப்பம்போல் எங்கே வேண்டுமானாலும் போக முடியாது. இரகசியமாக எங்கும் போக முடியாது. அதனால், நான் சென்றிருக்கிறேன் என்றால் அதற்கான ஆதாரங்களை வழங்குங்கள்-என்றார்.

## ரணிலை...

இது குறித்து பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜேமுனி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர், மருத்துவர் ருக்ஷான் பெல்லனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

நோயாளிகளின் உடல் நிலைமை மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தகவல்களை பொதுவாக ஊடகங்களுக்கு வழங்குவதில்லை. அவ்வாறு செயற்படுவதில் ஒழுக்கம் மற்றும் சட்ட ரீதியான சிக்கல்கள் காணப்படுகின்றன.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட சம்பவத்துடன், நோயாளியின் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதனை ஊடகங்கள் அவ்வாறே வெளியிட்டுள்ளன. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது ஆகவே, அது ஒழுக்க விதிமுறைகளை மீறும் செயற்பாடு இந்நிலையில் நாம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளோம். ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை குறித்து ஓர்அறிக்கை வெளியிடப்பட்டது.

வைத்தியருக்கு அத்தகைய அறிவிப்புகளை வெளியிட உரிமை இல்லை. ரணில் வேறு மருத்துவப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஒரு நோயாளி எங்களிடம் வரும்போது, சுகாதார அமைச்சாக எங்களால் முடிந்ததைச் செய்கிறோம்.

ஆனால், தேசிய மருத்துவமனையுடன் சம்பந்தப்பட்ட வைத்தியர் அவருக்கு சம்பந்தம் இல்லாத வேலையை செய்துள்ளார். ஒரு நோயாளியின் பதவி எதுவாக இருந்தாலும், ஊடகங்களுக்குத் தகவல் அளிக்க வைத்தியருக்கு எந்த உரிமையும் இல்லை - என்றார். (அ)

## செம்மணி...

திகதி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ள நிலையில் செம்மணி மனித புதைக்குழியை பார்வையிட வாய்ப்புள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (அ)

## கச்சதீவை...

இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் விஜித ஹேரத் பதில் அளித்தார்.

தற்போது தென்னிந்தியாவில் தேர்தல் காலம் ஏற்பட்டுள்ளதால், தமது அரசியல் தேவைகளுக் காக ஒவ்வொருவரும் வெவ்வேறு கருத்துக்களை கூறிவருவதாக அவர் கூறினார்.

அவ்வாறான அரசியல் கருத்துக்களை பொருட்படுத்த வேண்டிய தேவையில்லை எனவும், இராஜதந்திர மட்டத்தில் வெளியிடப்படும் கருத்துகள் தொடர்பில் கவனம் செலுத்த முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், கச்சதீவை, இந்தியாவுக்கு நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரசாங்கம்...

அரசாங்கமே இந்த நாட்டில் உருவான சிறந்த அரசாங்கம்.

இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு உச்ச அளவில் சேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஐந்து ஆண்டுகளின் பின்னர் இந்த அரசாங்கம் சரியான பாதையில் செல்லவில்லை என மக்கள் தீர்மானித்தால் ஜனநாயக ரீதியான முறையில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப முடியும்- என்றார். (அ)

## மேலும் 3...

எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 08 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், நேற்று புதன்கிழமை 35 ஆவது நாளாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை கட்டம் கட்டமாக இதுவரை 43 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது, நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூட்டு தொகுதியுடன் 158 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இதுவரை 169 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உ. கிழங்கு...

அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்குக்கு விதிக்கப்பட்ட விசேட பண்ட வரி 60 ரூபாவில் இருந்து 80 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேநேரம் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்திற்கு 10 ரூபாவாக நிலவிய விசேட பண்ட வரி 50 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த வரி திருத்தம் நேற்று முன்தினம் முதல் 03 மாதங்களுக்கு அமுலில் இருக்கும் என்று நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காய விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்கள் அறுவடைக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்று கடந்த சில நாட்களாக குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார் நகரசபை அமர்வு இன்று வரை ஒத்திவைப்பு!

மன்னார், ஓக. 28

மன்னார் நகர சபையின் கடந்த மாதத்திற்கான கூட்ட அறிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் சபையின் உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக கடந்த மாத கூட்ட அறிக்கை திருத்தங்களுடன் சமர்ப்பிக்கும் வகையில் இன்று வரை சபை அமர்வை மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் ஒத்திவைத்தார்.

சபையின் 3 ஆவது அமர்வு மீண்டும் இன்று காலை 9 மணிக்கு இடம்பெற உள்ளது.

மன்னார் நகர சபையின் 3 ஆவது அமர்வு நேற்றைய தினம் காலை 10 மணியளவில் நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன் தலைமையில் ஆரம்பமானது. இதன்போது அனைத்து உறுப்பினர்களும் சமூகமளித்திருந்தனர்.

முதலில் ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் சபை அமர்வு ஆரம்பமானது. இதன்போது கடந்த மாத கூட்ட அறிக்கை ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த கூட்ட அறிக்கையை சபையில் வாசிக்காது அதனை ஆதரித்து முன்மொழிந்து வழி மொழியுமாறு தவிசாளர் சபையில் தெரிவித்தார்.

இதனால் சபையில் நீண்ட நேரம் சர்ச்சை ஏற்பட்டதோடு,குறித்த கூட்ட அறிக்கையை சபையில் வாசித்து சரி பிழை பார்க்காமல் முன்மொழிய முடியாது என உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேலும் குறித்த அறிக்கையில் பல்வேறு பிழைகள் மற்றும் திருத்தங்கள் காணப்படுவதாகவும் எனவே குறித்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக உறுப்பினர்கள் திருத்தங்களோடு, சபையில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

இதனால் சபை அமர்வை தொடர்ச்சியாக நடத்திச் செல்ல முடியாத நிலை தவிசாளருக்கு ஏற்பட்டது.

இந்த நிலையில் கடந்த மாத கூட்ட அறிக்கை திருத்தங்களுடன் சமர்ப்பிக்கும் வகையில் நேற்றைய தினம் புதன் கிழமை இடம்பெற்ற 3 ஆவது சபை அமர்வு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இன்று காலை 9 மணிக்கு நகர சபையின் தவிசாளர் தலைமையில் மீண்டும் சபை அமர்வு இடம்பெற உள்ளது.

மன்னார் நகர சபையின் கடந்த இரு அமர்வுகளும் பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியிலும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணிலை விடுவிக்குமாறு எமக்கு இராஜதந்திர அழுத்தம் இல்லை!

### கைது அரசியல் பழிவாங்கலும் அல்ல என்கிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஓக. 28

பொதுச் சொத்துக்களை தவறாக பயன்படுத்துவது குற்றம் எனவும் அதற்காக கைதுசெய்யப்படுவது அரசியல் பழிவாங்கலாக அமையாது எனவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை விடுவிக்குமாறு அரசாங்கத்துக்கு எந்தவித இராஜதந்திர அழுத்தமும் கொடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசாங்கத்தின் கீழ், பாரபட்சமின்றி அனைவருக்கும் சமமாக சட்டம் பிரயோகிக்கப்படுகிறது. முறையான முறைப்பாட்டின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

பொதுச் சொத்துகளை தவறாக பயன்படுத்துபவர்கள் யாராக இருந்தாலும் தகுதி, தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. இதனிடையே, ரணில் விக்ரமசிங்கவை விடுவிக்குமாறு அரசாங்கத்துக்கு எந்தவித இராஜதந்திர அழுத்தமும் கொடுக்கப்படவில்லை.

வெளிநாடுகளில் இருந்து கருத்து தெரிவித்த இருவரும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் அல்லர், அதில் ஒருவர் இதேபோன்ற குற்றச்சாட்டுக்களை உடையவராவார். எனவே, இலங்கைக்கான உயர்ஸ்தானிகரோ, தூதுவரோ இதுவரையில் அவ்வாறான கருத்துக்களை தெரிவிக்கவில்லை.

இதனூடாக, இலங்கையில் சட்டம் அனைவருக்கும் சமமான வகையில் பிரயோகிக்கப்படுகிறது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொண்டு, அங்கீகரித்துள்ளது என்பதனை உணர முடிகிறது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டு பயணத்தையும், தற்போதைய ஜனாதிபதியின் உள்நாட்டு பயணங்களையும் ஒப்பிட முடியாது.

இலங்கைக்குள் மரண வீடுகளுக்குச் செல்வது அல்லது நாட்டில் ஏதேனும் ஒரு இடத்திற்குச் செல்வதையும் தனியான விமானத்தை ஒதுக்கி பயணம் செய்வதையும் ஒப்பிட முடியாது. அவ்வாறு ஒப்பிடுவது முற்றிலும் தவறானது.

அத்துடன், அரச ஊழியர்கள் தங்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக அரச வாகனங்களை பயன்படுத்துவதற்கான வரையறைகளை தொடர்பில் சுற்றறிக்கைகள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும், ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கையானது, பொதுச் சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியமையுடன் தொடர்பான பிரச்னையாகும். அது தொடர்பில் கிடைத்த முறைப்பாடு உரிய சட்ட நடவடிக்கைகளுக்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அதற்கமைய, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய, அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பின்னர் நோய் நிலைமை உள்ளிட்ட காரணங்களை கருத்திற்கொண்டு பிணையில் விடுக்கப்பட்டார்.

இந்த நிலையில், எவருக்கேனும் இந்த விசாரணை மற்றும் கைதுகள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் இருக்குமாயின், அது தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும்.

எனினும், கடந்த காலங்களில் சட்டம் முறையாக அமுல்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது.

ஆனால், தற்போது சட்டம் அனைவருக்கும் சமமான அமுல்படுத்தப்பட்டு, பெரும்பான்மையான மக்களின் எதிர்ப்பார்ப்புகள் நிறைவேற்றப்படுகிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ரணில் விக்கிரமசிங்க கைது அரசியல் பழிவாங்கல்தான்!

## பந்துல குணவர்த்தன குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 28

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது விவகாரத்தில் அரசியல் பழிவாங்கல் உள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பார்வையிடுவதற்காக சென்றமையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பார்வையிட முடியாத நிலையே ஏற்பட்டது. மருத்துவ அறிக்கைகளுக்கான பரிசோதனைக்கு அவர் உட்படுத்தப்பட்டுள்ளார். அதனை தொடர்ந்தே அவரை பார்வையிட முடியும்.

குற்றம் செய்தவர்கள் இருந்தால் அவர்களை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தண்டிக்கலாம். முன்னாள் ஜனாதிபதி எப்போதும் எந்தவிதமான விசாரணைக்கும் ஒத்துழைத்துள்ளார். ஆனால் ராஜசிங்க அரசனுக்குப்



பிறகு இந்த நாட்டை ஆட்சி செய்த தலைவர்களில் ஒருவரையும் இப்படிப் பிடித்துச் சிறையில் வைத்ததில்லை. எனவே இதனுள் அரசியல் பழிவாங்கல் உள்ளது என்பதே புலனாகின்றது. சட்டம் அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்படுவது நல்ல விடயமாகும். அவ்வாறு தான் செயற்படுகின்றார்களா என்பது எதிர்காலத்திலேயே வெளிப்படும்-என்றார். (அ)

## காயமடைந்த பொலிஸ் அலுவலர் விசேட விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 28

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து கொம்பனித்தெரு பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் உத்தியோகத்தர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க விடுதலை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற வளாகத்தை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதன்போது, அந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது டன் சில வீதிகளும் மூடப்பட்டிருந்தன.

இதனையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடியிருந்த பகுதியில் இருந்து தண்ணீர்ப் போத்தலொன்று பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரை நோக்கி எறியப்பட்டது. இதில் அந்த பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்தார். இது தொடர்பிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது. (அ)

# சட்ட விரோத மீன்பிடியைத் தடுக்க செயல்பாட்டு திட்டத்துக்கு அனுமதி

கொழும்பு, ஓக. 28

சட்ட விரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன் பிடியைத் தடுத்தல், ஊக்குவிக்காதிருத்தல் மற்றும் இல்லாதொழிப்பதற்கான வங்காள விரிகுடா பிராந்திய செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அழிந்துவரும் மீன்வளங்களை மீள்நிலைக்குக் கொண்டுவரல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், சட்டவிரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன் பிடியைத் தடுத்தல், ஊக்குவிக்காதிருத்தல் மற்றும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச செயற்பாட்டுத்திட்டம் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உறுப்பு நாடுகளால் 2001 ஆம் ஆண்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன் பெறுபேறாக, இலங்கையும் அதற்காக தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.

அத்துடன், பிராந்திய சட்டவிரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடி தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வங்காள விரிகுடா வேலைத்திட்டம் நாடுகளுக்கிடையிலான சர்வதேச அமைப்பின் அங்கத்துவ நாடுகள் கூட்டான பிராந்தி செயற்பாட்டுத் திட்டத்தில் கையொப்பமிடுவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளன.

இத்திட்டத்தின் மூலம் பங்களாதேசம், இந்தியா, மாலைதீவு, மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்குரிய தனித்துவமான பொருளாதார வலயங்களைப் போலவே, எங்களுக்கு கடல் மற்றும் சமுத்திரங்களுக்கு தேசிய நீதிமன்ற அதிகாரத்திற்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் சட்ட விரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன் பிடியைத் தடுத்தல், ஊக்குவிக்காதிருத்தல் மற்றும் இல்லாதொழிப்பதைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதற்கமைய, குறித்த பிராந்திய செயற்பாட்டுத் திட்டத்தில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

## அரச அடக்குமுறைக்கான சமிக்ஞை வெளிப்படுகிறது!

### கபீர் ஹசீம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 28

அரச அடக்குமுறைக்கான சமிக்ஞையே வெளிப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நலம் குறித்து விசாரிப்பதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சென்றமையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைவரும் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் என்பதை நாம் நுற்றுக்கு 200 வீதம் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் அரசியல் அடக்கு முறையை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அரசியல் கட்சிகளை அடக்குமுறைக்கு உட்படுத்தும் விடயத்தை நாம் முழுமையாக வேறு கோணத்தில் பார்க்கின்றோம். ஒரு அரசியல் கட்சியை ஒடுக்குவது என்பது பொதுமக்களை ஒடுக்குவதற்கான முன்னோடியாய் இருக்கலாம். அதனால் தான் நாங்கள் மக்களுக்காக நிற்கிறோம். முக்கிய எதிர்க்கட்சி என்பது மக்களின் பிரதிநிதித்துவம். ஆகையால் மக்களுக்கு முன்பாக இருக்கின்ற எதிர்காலம் நல்லதல்ல என்று நாங்கள் பார்க்கிறோம். சிறப்பாக அஞ்சல் வேலைநிறுத்தத்தை நிறுத்திய விதம் போன்ற செயல்கள், அரசு ஒரு அடக்குமுறை ஆட்சியைப் போல் நடந்து கொண்டது என்பதை நாங்கள் நம்புகிறோம்.

இது அரசியல் ஒடுக்குமுறையின் ஓர் அங்கமாகும். எனவே அது எங்கள் கடமை, அதை நாங்கள் செய்கிறோம். யாருடைய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அரசியல் அடக்குமுறைக்கு ஆளானால் அவர்களுக்காக நாங்கள் நிற்போம்-என்றார். (அ)

## வெலிக்கடை சிறைச்சாலை காணி ரணில் விக்கிரமசிங்கவினுடையது!

### வஜிர அபேவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 28

வெலிக்கடை சிறைச்சாலை அமைந்துள்ள காணி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் குடும்பத்தினால் வழங்கப்பட்ட காணி என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபெய்வர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வாரத்தை இலங்கைக்கு வரலாற்று கரும்புள்ளியாக அமைந்த ஒரு காலமாகவே நாங்கள் இதை அடையாளப்படுத்துகிறோம். குறிப்பாக நேற்று வெளியிடப்பட்ட ட்விட்டர் அறிவிப்பை நினைவூட்ட விரும்புகிறேன். சர்வதேச ஜனநாயக ஒன்றியம் அதில் கருத்துத் தெரிவித்துள்ளது.

சர்வதேச ஜனநாயக ஒன்றியம், அதன் துணைத் தலைவராக நீண்டகாலம் பணியாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை குறித்து கடுமையான கவலை வெளியிட்டுள்ளது.

மற்றொரு முக்கிய விடயம் , ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு சிறைக்கு கொண்டு செல்லப்பட்ட இடம் அவரது குடும்பத்திற்கு சொந்தமான காணியாகும். அவரது மைத்துனியின் பெயரில் இருந்த 43 ஏக்கர் நிலத்தில் தான் வெலிக்கடை சிறை கட்டப்பட்டுள்ளது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமான சம்பவமாகும். அந்த நில ஆவணங்களின் நகலை ஊடகங்களுக்கு வழங்குவேன். இது போன்ற வம்ச பாரம்பரிய குடும்ப உறுப்பினருக்கு நிகழ்ந்த மிகுந்த வேதனையூட்டும் நிகழ்வாக இதை நாம் காண்கின்றோம்.

நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும், அனைத்து சட்டத்தரணிகளும், அனைத்து மருத்துவர்களும் அவருக்காக ஒன்றிணைந்தனர். அவர் பிணையை பெறுவதற்காக மருத்துவர்கள் விடுமுறையைத் துறந்து, நீதிமன்ற வளாகத்தில் தண்ணீர் கூட குடிக்காமல் காத்திருந்து, பிணை ஆவணங்களில் கையொப்பமிட்டனர். அதற்காக அனைவருக்கும் எங்கள் கட்சியின் நன்றியையும் மரியாதையையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆம். அவர் காலை 9.30 மணியளவில் அழைக்கப்பட்டு, அவரிடம் 4-5 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டது. அவருக்கு உணவுக்கான நேரமும், மருந்துகளும் தவறாமல் தேவையானவை. ஆனால் அந்த ஒழுங்கு மாறியது. பின்னர் நீதிமன்றத்தில் மேலும் 5-6 மணி நேரம் இருளில் வைக்கப்பட்டார். இரவு 10.30 வரை, சுமார் 12 மணி நேரம் இவ்வாறு கையாளப்பட்டமையினாலேயே அவருக்கு இத்தகைய உடல் நலக்குறைவு ஏற்பட்டமைக்கு காரணமாகும்-என்றார். (அ)

## தேசபந்துவுக்கு பிணை

கொழும்பு, ஓக. 28

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கொழும்பு - கோட்டை நீதவான் நிலிபுலி லங்காபுர உத்தரவிட்டுள்ளார்.

தலா 1 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு காலி முகத்திடலில் இடம்பெற்ற கோட்டா கோ கம போராட்டத்தின் போது, தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பிலேயே தேசபந்து தென்னக்கோன் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்றைய வழக்கு விசாரணையின் போது, குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி முன்வைத்த சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org